வாழ்க்கையும் பிரச்னைகளும் (1)

அலைகள் மோதினால் அங்கலாய்க்காதே

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross
BANGALORE

— D. T. ராஜா —



வெளியிடுவோர்:
சுவிசேஷ நண்பர் ஐக்கியம்
ஜாக் தெரு, நாகர்கோவில் - 629001
இந்தியா

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No. 051 C
BANGALORE-23

அலைகள்
மோதினால்
அங்கலாய்க்காதே

— D. T. ராஜா —

வெளியிடுவோர்:

சுவிசேஷ நண்பர் ஐக்கியம்

ஐசக் தெரு, நாகர்கோவில் - 629001

இந்தியா

முகவுரை

அன்பர் இயேசுவின் அரும் கட்டளைகளுக்கு முழுவது மாய்க் கீழ்ப்படிந்து, வாழ்க்கையை அவருக்கென்று சமூல மாய் சமர்ப்பித்து, முழுப் பிரதிஷ்டையோடு வாழும் தேவ பிள்ளைகள் ஆயிரமாயிரம் பேர், அனுதின வாழ்க்கையில் அரும் பெரும் பிரச்சினைகளிலும்-சோதனைகளிலும் பாடுகளிலும்–வியாதிகளிலும் – அல்லலுறும் சோக நிலையைக் கண்டும், கேட்டும், உள்ளத்தில் வேதனையுற்று தேவனை நோக்கி, "இது ஏன் ஆண்டவரே!" என இறைஞ்சி கேட்க, அவர் அளித்த விடையினை யான் ஓர் சிறு புத்தக வாயிலாக அச்சிட்டு, இதன்மூலமாய் ஆயிரமாயிரம் பேர் ஆறுதலும், ஆண்டவரின் பூரண சமாதானமும் அடையவேண்டுமென்ற ஜெபத்தோடும் வேண்டுதலோடும் இதனை எழுத முற்பட்டுள்ளேன்.

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" யோவான் 16:33

என்றவர் தமது பிள்ளைகள் படப்போகும் பாடுகளையும், அதிலிருந்து தப்புவதற்கான போக்கையும் உண்டாக்குகிறவர்.

அவருக்கே துதியும் கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக.

வாசிக்கும் அன்பர்களுக்கு;

நீங்கள் யாராயிருப்பினும், இப்புத்தகத்தினை வாசிக்க ஆரம்பிக்கும்போது உண்மையாய் ஆண்டவர் உங்கள் பிரச்னைக்கு விடுதலைதர வல்லமையுள்ளவர் என்ற விசுவாசத்தோடு ஒரு நிமிடம் பரத்தைநோக்கி ஜெபித்தபின் வாசிக்க முற்படுங்கள்.

வல்லமையுள்ள தேவ ஆவியானவர் உங்களுக்குள் அற்புதமாய்க் கிரியை செய்வதை அறிந்துகொள்வீர்கள்.

ஆக்கியோன்

மதிப்புரை

மிஸிஸ். வசந்தா கிங்ஸ்லி

தூரக்கிழக்கு ஒலிப்பதிவகம்
த. பெ. 2526
பெங்களூர்

"அலைகள் மோதினால் அங்கலாய்க்காதே" என்ற இச் சிறுநூலை ஒருமுறை வாசித்து முடித்தவுடன் "என்ன, இதன் ஆசிரியருக்கு என்னுடைய பிரச்சினைகள் எவ்வாறு தெரிந்தது" என்று நினைத்தேன்.

இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் இவ்வாறுதான் எண்ணுவார்களென்று திட்டமாய்க் கூறுகிறேன். பிரச்சினைகள், துன்பங்கள் இல்லாத மனிதன் இவ்வுலகில் இல்லை.

அப்படியிருக்கையில் மனிதன் எவ்வாறு சந்தோஷமாயும் சமாதானமாயும் வாழ்வது? "விடுதலை" என்பது துன்பங்களும் பிரச்சினைகளும் நீங்கிவிடுவது அல்ல.

அவை எல்லாவற்றின் மத்தியிலும், அவை தன் வாழ்வில் வரும் காரணத்தை அறிந்து, அச்சூழ்நிலையிலேயே தன்னுடைய குற்றங்குறைகளை உணர்ந்து, திருந்தி தேவன் காட்டிய வழியில் நடப்பவன்தான் வெற்றி கொள்பவன்; விடுதலையடைந்தவன். இச்சிறந்த அன்பின் வழியைக் கூறுவது இச்சிறுநூல்.

தன் கரத்தை நீட்டி, காப்பாற்றும்படி கெஞ்சும் மனிதனை தேவன் தமது கரங்களால் தூக்கி அணைக்கிறார், ஆதரிக்கிறார், ஆட்கொள்ளுகிறார். பின்பு தன் கரத்திலிருந்தே "அலை மோதினால் அங்கலாய்க்காதே" என்ற இந்நூலையும் மனிதன் கரத்தில் கொடுக்கிறார்.

ஏனெனில் இவ்வுலக வாழ்க்கைக்கு இச்சிறு நூல் அத்தனை அத்தியாவசியமாயிருக்கிறது. இவ்வித எண்ணத்தோடு யாவரும் இப்புத்தகத்தை வாசிக்கவேண்டுமென்பது எனது அவா.

பெங்களூர் — மிஸிஸ். வசந்தா கிங்ஸ்லி
1-5-'75

மதிப்புரை

Dr. புஷ்பராஜ்

32, முகமதன் தெரு
பழைய சூரமங்கலம்
சேலம்-5.

சகோதரன் D. T. ராஜா அவர்கள் எழுதிய "அலைகள் மோதினால் அங்கலாய்க்காதே" என்ற முதல் பதிப்பை வாசித்தேன். மிகவும் ஆறுதலாகவும் விசுவாசிகளுக்கு பெலத்தை கொடுக்கிறதாகவும் அமைந்து இருப்பதை கண்டு தேவனை ஸ்தோத்திரித்தேன்.

உலகத்தில் எல்லா தரத்தில் உள்ள மக்களும் எந்த வகையிலாவது மனம் குழம்பி, எதைக் குறித்தாவது கவலைப் பட்ட வண்ணமாகவே இருக்கிறார்கள். அதிலும் விசேஷமாக உலகத்தின் சமீபத்திய கணக்கின்படி ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகம் கவலைப்படுவதாக கணக்கெடுத்து எழுதியதை ஒரு ஆங்கில பத்திரிக்கையில் வாசித்தேன். அந்த கணக்கு சரிதானோ, என்னவோ?

சமீபத்தில் தமிழ்நாட்டில் கோவைக்கு அருகே உள்ள ஊரில் ஒரு சகோதரியை சந்தித்தேன். இரட்சிக்கப்பட்ட பெண்தான்; என்றாலும் அவள் உள்ளம் பலவகையில் கவலை கொண்டு இருந்தது. ஒருநாள் "அலைகள் மோதினால் அங்கலாய்க்காதே" என்ற முதல் பதிப்பு அவள் கையில் கிடைத்ததாம், அதை படித்ததில் இருந்து அவள் உள்ளம் தைரியப் பட்டதாம். அவளை நேசிக்கிற இயேசு ஜீவிக்கிறார் என்று கண்டு கொண்டாளாம். இப்படி அந்த சகோதரி மூலம் கேள்விப்பட்டேன்.

பயமுறுத்துகிற பல பிரசங்கங்களைக் கேட்கிறோம், படிக்கிறோம். ஆனால் இவ்வகை புஸ்தகங்கள் மக்களுக்கு விசேஷமாக விசுவாசிகளுக்கு தைரியத்தையும் பெலத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சீக்கிரம் வர இருக்கும் நம் அன்பு தெய்வம் இயேசு தாம் வரும்வரை தம் மக்களை இப்படிப்பட்ட புஸ்தகங்களின் மூலமாகவும் ஜீவனுள்ள தம் வசனங்களின் மூலமாகவும் நம்மை பெலப்படுத்த இந்த இரண்டாவது வெளியீட்டையும் இயேசு தாமே தம் காயப்பட்ட கரத்தால் ஆசீர்வதித்து வாசிக்கும் அனைவருக்கும் ஆறுதலையும், பெலத்தையும் அளிப்பாராக.

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

இப்படிக்கு
கிறிஸ்துவின் அன்பு பணியில்
புஷ்பராஜ்

சேலம்
1-5-'75

1 அலை

ஓங்கி அடிக்கும் அலைகளைக் கடந்து செல்ல முற்படும் கட்டுமரம் ஒன்றைச் சற்று உற்றுநோக்குங்கால் அதனைத் தண்டு வலித்துச் செல்லும் இரு மீனவர்களுக்கும், கடலில் அலைபோல் எழும்பும் அலைகளுக்கும் ஏற்படும் ஓர் கடும் போரைக் கண்கூடாகக் காணலாம்.

கட்டுமரத்தை எடுத்து கடலுக்குள் செல்லப் புறப்படும் மீனவர்கள் அதிக ஆர்வத்தோடும், எதிர்பார்ப்போடும் கடலுக்குள் செல்ல முற்படுகின்றனர். காற்றின் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க அலையின் வேகமும் அதிகரிக்கின்றது.

கடலுக்குள் செல்ல முற்படும் கட்டுமரம் அலையோடு சேர்ந்து கரைக்கே வந்துவிடுகின்றது. கட்டுமரம் கடலுக்குள் செல்ல எவ்வளவோ முயற்சிகளை மீனவர்கள் எடுக்கின்றனர். ஆனால் கட்டுமரமோ கடலுக்குள் செல்லவில்லை.

முயற்சிகள் பலனளிக்கவில்லை. எனினும் மீனவர்கள் சோர்ந்துபோகவில்லை. "எதிர்ப்பு எதிர்ப்பாகவே இருக்கட்டும். எங்களால் இயன்றதைச் செய்தே ஆவோம்!" என திட நம்பிக்கையுடன் இறைவன்மேல் முழு நம்பிக்கையும் வைத்து, முழு முயற்சி செய்கின்றனர் மீனவர். நேரம் கடந்துகொண்டே செல்லுகின்றது. கரையில் நின்று பார்த்துக்கொண்டு நிற்கும் எண்ணிறந்த மக்களுக்கு ஏமாற்றத்தையும் - துயரத்தையும் கொடுக்கின்றது அம்மீனவர்கள் படும் அவலநிலை.

ஆனால் –

கடும் எதிர்ப்பின் மத்தியில் படும் பிரயாசம் பலனற்றதாய்ப் போகவில்லை. எதிர்ப்பு எதிர்ப்பாகவே இருக்கின்றது. ஏங்கலும், ஏமாற்றமும் ஒருபக்கம் இருக்கின்றது. ஆனால் முயற்சியோ தளரவில்லை.

நீண்ட போராட்டத்திற்குப்பின், அவ்வெதிர்ப்பின் மத்தியிலும் ஏற்றதோர் தருணம் கிடைக்கின்றது. மீனவர்கள் கடலுக்குள் கட்டுமரத்தோடு பாய்கின்றனர். ஆகா! அக்காட்சி எத்தனை மனோகரமானது! எத்தனை மகிழ்ச்சிக்குரியது!!

வாழ்க்கை என்பது அலைகளும், புயல்களும் நிறைந்த ஒன்றே. வாழ்க்கைப் படகு இதனூடே கடந்துசெல்ல முற்படும்போது வரும் எதிர்ப்புகள் ஏராளம்! அதனால் ஏற்படும் ஏமாற்றம் அதிகம்!! எதிர்ப்பின் மிகுதியால் வாழ்க்கையில் சோர்படைந்து, சோர்ந்துபோவோர் எண்ணற்றோர். இதன் காரணமாக இறைவனைக் குறை கூறுவோர் கணக்கிலடங்கார். முன்செல்ல முற்படும்போதெல்லாம் சோதனைகள் நம்மைப் பின்தள்ளவே செய்கின்றன. முன்னே ஓர் அடி எடுத்து வைத்தால் பிசாசுகளின் கொடுமையால் பின்னே இரு அடிகள் எடுத்துவைக்க நேரிடுகின்றது.

"வெற்றி கண்டுவிட்டோம்!" என பெருமைப்படும்போது தோல்வி தானாகவே வந்து நம்மைச் சூழ்ந்துகொள்ளுகின்றது. நம் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகின்றது. "அலைகள் மெதுவாகவேயிருக்கும். சுலபமாகக் கடந்துவிட்டால் அமர்ந்து கிடக்கும் கடலுக்குள் அமைதியாகச் செல்லலாம்!" என மனநிறைவு வரும் நேரத்தில் பனைமரம் உயரம் ஓர் பிரமாண்டமான அலை வருகின்றது. "கட்டுமரத்தோடு அனைவரும் மூழ்கிவிட்டார்கள்!" எனப் பார்ப்போர் உள்ளம் பதற, அவர்கள் மெதுவாகத் தலைதூக்கி இன்னமும் முயற்சி செய்துகொண்டேயிருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

இதுபோலவே உத்தம விசுவாசத்தோடும், உறுதியான நம்பிக்கையோடும் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் ஓர் தேவபிள்ளை சோதனை வந்தால் சோர்ந்துபோவதில்லை. போராட்டங்களினால் அமிழ்ந்துவிடுவதில்லை. பிறர் பார்வைக்கும், எதிர்பார்ப்புக்கும் இவன் 'அமிழ்ந்துவிட்டான்' அல்லது "அழிந்தேவிட்டான்" எனத் தோன்றினாலும் கர்த்தருடைய பெரிதான "கிருபை" அவனைச் சூழ்ந்து கொண்டிருப்பதால்

அவன் எவ்விதத்திலும் "கைவிடப்படுவதில்லை, தொலைந்தும் போவதில்லை".

இதைத்தான் அன்பின் ஆண்டவர் பவுலடியார் மூலம் "என் கிருபை உனக்குப் போதும். பெலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளக்கும்" என இறை பெலனை இத்தனை தெளிவாய்க் கூறுகின்றார்.

ஏசாயாவின் புத்தகத்தில், "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" எனப் படிக்கின்றோம்.

கடும்புயல் வீசினாலும், கொடுங்காற்று மோதினாலும், பெரும் அலைகள் எழும்பினாலும், புயல் சீறினாலும், மழை கொட்டினாலும், அவரை உத்தமமாய் நித்தமும் பின்செல்லும் அத்தனை பக்தர்களும், அத்தன் இயேசுவின் திருச் சித்தத்தினாலும், உறுதியான உத்தம வாக்குத்தத்தத்தினாலும் சத்தியமாகவே காக்கப்படுகின்றனர் என்பதற்கு எவ்விதஐயமும் இல்லை.

ஏசாயா 49:15,16; 54:10,11; 42:3; சங். 55:22; புலம். 3:22,25,26,31,32; தானி. 3:17; 6:22; மீகா 7:7,19; ஆபகூக் 3:17,18; வெளி. 7:14,17; 1 பேது. 5:7; எபி. 4:15,16; 1 தீமோ. 1:12; பிலி. 4:6,7.

இவ்வசனங்கள் திகைப்போருக்கு தீவட்டிபோலவும், கலங்குவோருக்கு கலங்கரை விளக்குப்போலவும், மலைப்போர்க்கு மின் விளக்கைப்போலவும் ஒளிகொடுத்து வழிகாட்டுவதைக் காணலாம்.

2 புயல்

வாழ்க்கையில் வரும் பிரச்சினைகள் எதிர்பாராதவை. பல வேளைகளில் தவிர்க்கமுடியாதவை. எதிர்க்க முடியாதவை. சில வேளைகளில் எதிர்பாராத இடங்களிலிருந்தும் வந்துவிடுகின்றன. வியாதிகள், போராட்டங்கள், சிநேகிதரால் வரும் எதிர்ப்புகள், சத்துருக்களால்வரும் சதிமோசங்கள், மரணங்கள், உறவினர்களால் வரும் சோதனைகள், புருஷன், மனைவி, மக்கள், பெற்றோர் ஆகியோரால் வரும் கொடிய துன்பங்கள், கடுஞ்சொற்கள், சூழ்ச்சிகள், நெஞ்சை நோகப் பண்ணும் வஞ்சக வார்த்தைகள், உள்ளத்தை உடையச் செய்யும் நிந்தனைகள், நேசிப்போரின் மறைமுக ஏசல்கள், உத்தியோகத்தில் தகராறுகள், உடன் பணியாற்றுவோரால் ஏற்படும் தொல்லைகள் ஆகியவை வாழ்க்கையில் வெறுப்பை ஏற்படுத்துகின்றன. மட்டுமல்ல, வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும்படி தூண்டுகின்றன.

அன்று ஒரு பெண்ணின் வார்த்தைக்கு பயந்து, "தான் சாகவேண்டும்!" என்று கோரி, "போதும் கர்த்தாவே! என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்!" என்ற எலியாவைப் போல தனக்குள்ளேயே கூறவேண்டிய சூழ்நிலைகள் வருகின்றன. 1 ராஜா. 19:4.

ஆனாலும், அந்நிலையிலும் அன்பின் நேசரின் அரவணைக்கும் கரம் அதிசயமாய் நீட்டப்படுகின்றது அப்பமும், தண்ணீரும் அற்புதமாய்க் கொண்டு தரப்படுகின்றன. இதுதான் சோர்ந்துபோகும் ஆத்துமாவைத் தட்டி எழுப்பும் அன்பின் நேசர் கரம். அவர் உறங்குவதும் இல்லை, தூங்குவதும் இல்லை. தமது சிறகுகளாலேயே தமது பிள்ளைகளை மூடுகின்றார். எரே. 31:25.

அன்றொரு நாள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தாள் ஓர் மாது. துருத்தியில் தண்ணீர் தீர்ந்துவிட்டது. பிள்ளையோ

தண்ணீர் கேட்டுத் துடிக்கின்றது. ஏங்குகின்றாள், தவிக்கின்றாள், புலம்புகின்றாள், கண்ணீர்விடுகின்றாள், ஓடோடி அங்குமிங்கும் அலைந்து பார்த்தாள். தண்ணீரோ கிடைக்கவில்லை. நம்பிக்கையிழந்தாள். எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய எண்ணத்தைக் கைவிட்டாள். தன் பிள்ளையின் மரணத்தை எதிர்பார்த்தாள். காக்கும் கரம் ஒன்று உண்டு என்ற சத்தியம் அவள் கண்ணிற்கு மறைக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவள் எதிர்பார்ப்பிற்கு நேர் எதிராய், "ஆகாரே! உனக்கு என்ன சம்பவித்தது? பயப்படாதே .." என்று கூறி தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார். அப்போது அவள் ஒரு தண்ணீர் துரவைக் கண்டு போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள். ஆதி. 21:14,19. இதுதான் மறைந்து நின்று மகிமையான கிரியைகளைச் செய்யும் மகத்துவமுள்ள தேவனின் மாறாத கரம் "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்." எபி. 13:8.

நாகமானுக்கு தன் வாழ்க்கையிலே ஓர் வெறுப்பு, அதோடு ஓர் கசப்பு. தன்னையே சபிக்கிறான். தன் வியாதியின் வேதனை தாளாமல் தன்னையே மாய்த்துக்கொள்ளவும் வகை தேடுகின்றான். இதன் காரணமாய் அவன் மனைவி அங்கலாய்க்கின்றாள். துக்கத்தில் மூழ்கி சோர்ந்து போகிறான். கிலேசமடைந்து மயங்கி நின்றான். இதனை கண்ணோக்கிய இஸ்ரவேல் நாட்டாளான அடிமைப் பெண் காரியத்தைப் புரிந்துகொண்டு, விடுதலைக்கான வழியை விவரமாய் வகுத்துத் தந்தாள்.

வியாதி தரும் வேதனையால், வேலைக்காரியின் வார்த்தைக்குக் கீழ்ப்படியும் நிலை ஏற்பட்டதை எண்ணி ஒரு பக்கம் ஏக்கம், மறுபக்கம் ஓர் பெரிய எதிர்பார்ப்பு. இருள்சூழ்ந்த வாழ்க்கையில் ஓர் புதிய ஒளி பிரகாசிக்க ஆரம்பிக்கின்றது. ஆம்! நம்பிக்கையிழந்து, வாழ்க்கையில் நிம்மதியற்று வாழ்ந்த நாகமான், எலிசாவின் வார்த்தையின்படி யோர்தானில் ஏழு

தரம் மூழ்கி எழுந்து தன் வியாதி நீங்க, பூரண சொஸ்த மடைகின்றான். 2ராஜா. 5:1-14. இதுதான் அன்பின்நேசரின் அரவணைக்கும் கரம்; சுத்தர் இயேசுவின் சுகமளிக்கும் கரம். அக்கரம் இன்றும் குறுகிப்போகவில்லை என்றும் குறுகப்போவதில்லை. மறைந்து மாய்ந்துபோகவில்லை.

அன்றொரு நாள் மாது ஒருத்தி தன் வாழ்க்கையில் ஏற்பட்ட பெரும்பாடுகளினிமித்தம் வாழ்க்கையில் வெறுப்புற்று, வீட்டை விட்டு வெளியே வந்தாள். கூட்டமொன்று சென்று கொண்டிருந்தது. கூட்டத்தின் நடுவே மகிமை நிறைந்தவராய் மன்னன் இயேசு மெதுவாய் நடந்து சென்று கொண்டிருந்தார். அம்மாது "அவர் யார்?" எனக்கேட்டு, விசாரித்து, எம்பெருமான் இயேசுவின் வல்லமையை புரிந்து கொண்டாள். அவர் தொட்டால் தனக்குச் சொஸ்தம் நிச்சயம் என நன்கு அறிந்து கொண்டாள். ஆனாலோ அவர் தன்னை தொடுவது அசாத்தியமான காரியம். ஏன்?

கூட்டம் மிகுதி, அவரைச் சூழ திரளான மக்கள். அவர்கள் முன்சென்று தன் பன்னிரு வருடப் பெரும்பாட்டினைப் பற்றிய பெருங்கதையைப் பகருவது கூடாத காரியம். என் செய்வது? அவரால் முடியும்; ஆனால் அவரையோ சந்திக்க வாய்ப்பு இல்லை ஏங்குகின்றாள், அங்கலாய்க்கின்றாள். அந்நிலையில் அவள் உள்ளத்திலோர் புத்துயிர் கொடுக்கும் புது எண்ணம் உதிக்கின்றது. இருளின் மத்தியில் மருவிய ஓர் ஒளி! ஆம்! பூரண விசுவாச எதிர்பார்ப்போடு கூடிய ஓர் புது முறை. என்ன? "அவர் என்னைத் தொடத் தேவையில்லை. நானே மெதுவாய்ச் சென்று அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொடுவேன். அவருக்கு மட்டுமல்ல, அவருடைய வஸ்திரத்திற்கும்கூட வல்லமை உண்டு. என் விசுவாசம் அவரது வஸ்திரத்தின் வழியாய் அவர் உள்ளத்திற்குள் பிரவேசிக்கும். எனவே அவரது வல்லமை, அவரது வஸ்திரத்தின் வழியாய் என் சரீரத்திற்குள் பிரவேசிக்கும்போதே நான் சுகமடைவேன்!" எனப் பூரணமாய் நம்பினாள்.

ஆம்!

அச்சிறந்த விசுவாசத்தைக் காணும் கண்கள் இரகசியமாய் அவரைத் தொடவந்த அந்த மாதுவை பகிரங்கமாய்க் கண்டன. என்ன ஆச்சரியம்! நம் பாடுகளைக் காணும் அருமை இரட்சகரின் கண்கள் இன்றும் மங்கிப்போய்விடவில்லை. இருளடைந்துவிடவில்லை. அவ்வேழைப் பெண்ணிற்குள் மறைந்துகிடந்த மாணிக்கம் போன்ற விசுவாசம் இன்று நம்மில் ஒருவருக்கும் இல்லாததே, அவரால் வரும் சரீர சுகத்தை நாம் அடைந்து கொள்ளாததின் காரணம். அவர் வஸ்திரத்தின் ஓரம் இன்னும் வல்லமையுள்ளதாகவே இருக்கின்றது.

3 கொந்தளிப்பு

பக்தனாகிய யோபுவையும் அலைகள் விட்டபாடில்லை. கொந்தளிக்கும் கடலுக்குள் சத்துருவாகிய சாத்தான் அவனை அமிழ்த்த உத்தரவு கேட்டுக்கொண்டான். "பாம்பின் வாயில் அகப்பட்ட தவளைபோல்" அலறும் நிலை அல்லலுறும் சூழ்நிலை. அலைகள் அடுக்கடுக்காய் மோதி அடிக்கின்றன. "கட்டுமரமாகிய வாழ்க்கை கடலுக்குள் அமிழ்ந்துவிடுமோ?" என கலங்கக்கூடிய சந்தர்ப்பம். பிள்ளைகள் இல்லை, கன்று காலிகள் மாய்ந்துவிட்டன. பொருட்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டன. இத்தோடு விட்டானா சாத்தான்? விசுவாசத்தில் நிலைநிற்கும் விசுவாசி ஒருவனை விளத்தள்ளும் வெறியில் கடைசிமட்டும் சோதிக்கின்றான் சோதனைக்காரனான சாத்தான். அவன் கெர்ச்சிக்கிற சிங்கம். 1 பேதுரு 5:8.

ஏன் தேவன் விசுவாசிகளை சோதனைக்கு ஒப்புக்கொடுக்கின்றார்? இதற்குரிய விடையினை 1 பேது. 1:7-ல் காண்கின்றோம். விசுவாசம் அதிக விலையேறப்பெற்றது. இது தேவனுடைய பிள்ளைக்கு அவர் வெளிப்படும் நாளில், புகழ்ச்சியும், கனமும், மகிமையுமுண்டாகக் காணப்படுகின்றது. எனவே தேவனுடைய பிள்ளைகளுடைய விசுவாசமும், விசுவாசத்தோடு கூடிய பாடுகளும், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது; அவர்கள் மகிழ்ந்து களிகூருவதற்கு ஏதுவாக இருக்கின்றன. 1 பேது 4:13. எனவே சோதனை தேவனுடைய பிள்ளைகள் மகிமையை அடைந்து கொள்ளத் தேவையாயிருக்கின்றது.

யோபு இத்தனை பாடுகளின் மத்தியிலும் பொறுமையோடு இருக்கின்றான். மட்டுமா? சரீரம் முழுவதும் கொடிய பருக்கள். ஒரு ஓட்டை எடுத்து, தன்னைச் சுரண்டிக்கொண்டு, சாம்பலில் உட்கார்ந்தான்.

அந்நிலையில் தான் நேசிக்கும் மனைவி, அவனுக்கு ஆதரவாயும், ஆறுதலாயும் இருப்பாள் என எதிர்நோக்குகின்றான்.

ஆனால் அதற்கு நேர்மாறாக அவள் அவன் நெஞ்சத்தை மேலும் புண்படுத்துகின்றாள். "எரியும் கொள்ளியில் எண்ணெய் வார்த்தார்போல்" அவள் கூறுகின்றாள்: "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்".

உயிருக்குயிராய் நேசிக்கும் மனைவி நேரடியாய் வந்து, "உயிரை விடும்!" என்று கூறும் கடுமையான சொல்லைவிட உலகத்தில் மனுஷனுக்குக் கசப்பான காடி வேறு எதுவும் உண்டா?

இதனால்தான் அருமை இரட்சகர் இயேசு தமக்கருமையான மக்களைப் பார்த்து, "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லோராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" மத்.10:22. "ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே!" என்று கூறினார்.

இச்சத்தியத்தினை மீகாவின் புத்தகத்தில் சற்று தெளிவாய்க் காணலாம். "சிநேகிதனை விசுவாசிக்கவேண்டாம். வழிகாட்டியை நம்பவேண்டாம். உன் மடியிலே படுத்துக்கொள்ளுகிறவளுக்கு முன்பாக உன் வாயைத் திறவாமல் எச்சரிக்கையாயிரு... மகன் தகப்பனை கனவீனப்படுத்துகிறான். மகள் தன் தாய்க்கு விரோதமாகவும், மருமகள் தன் மாமிக்கு விரோதமாகவும் எழும்புகிறார்கள்".

யோபு தன் அங்கலாய்ப்பின் வேளையில் யார் யாரிடமிருந்து ஆறுதலை எதிர்பார்த்தானோ அவர்கள் எல்லோரிடமிருந்தும் எதிர்ப்புகளும் ஏமாற்றமுமே ஏற்பட்டது. ஆனால் அவன் தன் முழு நம்பிக்கையையும் தேவன்மேல் வைத்திருந்ததினால் "அவர் தன்னைக் கைவிடமாட்டார்" என்று முழு நிச்சயத்தோடு, பரத்தையே நோக்கி எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

இவ்வுலக வாழ்க்கையைக் காட்டிலும் நித்திய ஜீவனை அதிக ஆவலோடு எதிர்பார்த்திருந்தான். விசுவாசம் உள்ளத்திற்குள்ளே உரம் கொண்டதாயும், உறுதியானதாயும்

நிலைபெற்றிருந்தமையால் சாத்தான் அவனை அசைக்க முடியவில்லை. அவனுக்குள் இருந்த விசுவாசம் அவனது வார்த்தையின் மூலமாய் வெளிப்பட்டது. "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழிந்துபோன பின்பு, நான் என் மாம்சத்திலிருந்து தேவனை பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன். அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளந்திரியங்கள் எனக்குள் சோர்ந்து போகின்றன". யோபு 19:15, 27.

எவ்வளவு சிறப்பான விசுவாசம்! எவ்வளவு பெரிதான எதிர்பார்ப்பு! ஆம், தேவனுடைய பிள்ளைகளுக்கு இவ்வுலகத்தில் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை. ஆதலால்தான் பரி. பவுல் கூறுகின்றார், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம்". பிலி. 3:22.

விசுவாசிகளின் எதிர்பார்ப்பெல்லாம் நித்தியத்திற்குரியவைகளே. ஆயினும் தேவன் தமது பிள்ளைகளுக்குத் தேவையான ஆசீர்வாதங்களைக் காலத்திற்கேற்றவாறு வழங்காதிருப்பதில்லை.

"முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் கூடக் கொடுக்கப்படும்" மத். 6:33.

"இதோ நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" எரே. 32:27.

உத்தம விசுவாசத்தோடும், உறுதியான எதிர்பார்ப்போடும் அன்பின் ஆண்டவரை எதிர்நோக்கிப் பொறுமையோடு பாடுகளைச் சகித்த யோபுவை தேவன் நினைத்தருளினார். "கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்".

நமது பிரச்சினைகளையும், கவலைகளையும் மாற்றுகிறவர் தேவனே. அநேகர் மனுஷர்களைத் தேடி அங்குமிங்கும் அலைகின்றனர். ஆனால் தங்கள் பாரங்களைச் சுமக்கிறவர் கிறிஸ்து ஒருவரே என்பதைப் பலவேளைகளில் மறந்துவிடுகின்றனர். இது சிக்கலான ஓர் செயலாகும். மனுஷரைநம்பி ஏமாற்றமடைந்து தேவனைக் குறைகூறும் அநேகரை நாம் இன்று காண்கிறோம்.

"மனுஷரை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" சங், 118:8. "சிறையிருப்பைத் திருப்பும் தேவன்" கொடுத்ததென்ன? "யோபுக்கு முன்னிருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தார்." யோபு 42:10. "கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்" யோபு 42:12.

4 அமைதி

புயல் வீசினாலும், கொடுங்காற்று மோதினாலும், அசையாது, ஆடாது, தளராது, சோராது விசுவாசத்தில் உறுதியாய் நிற்கும் உத்தம பக்தர்களைக் காத்துக்கொள்ளுகின்றார். தேவையான நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் வளமாய்-தேவைக்குத்தக்கதாய் அளித்து உதவுகின்றார். அலையைக் கண்டு அஞ்சாது நிற்க பெலனளிப்பவரும் அவரே.

இவை ஒருபுறம் நிற்க, சில வேளைகளில் அலைகள் அதி பயங்கரமாய் மோதி அடிக்கின்றன. அவ்வலைகள் பக்தர்கள், பரிசுத்தவான்கள் ஆகியோரின் இவ்வுலக வாழ்க்கையை அமிழ்த்தி விடுகின்றன. ஆயினும் அத்தேவதாசர்கள், உத்தம பரிசுத்தவான்கள், மகிமையின் தேவனைத் தரிசித்தவாறே இவ்வுலக வாழ்க்கையை நீத்து மறுமைக்குள் சென்றுவிடுகின்றனர்.

பக்தனாகிய ஸ்தேவான்மேல் கொந்தளிக்கும் அலைகள் பொங்கி வீழ்ந்தன. அந்த அலைகள் பனை உயரத்திலும், மலை வண்ணத்திலும் அச்சிறந்த தேவப்பிள்ளையின்மேல் விழ ஆரம்பித்தன. அன்பின் நேசரின் அரவணைக்கும் கரம் பரலோகத்தில் நீட்டப்பட்டிருந்ததேயன்றி இவ்வுலகத்தில் அதனைக் காணவில்லை.

அவன்மேல் சீறிப்பாய்ந்த யூதத் தலைவர்களோ, அவன்மேல் கல்லெறிந்த யூதகுல மக்களோ, அவனைக் காயப்படுத்திக் கொன்ற கடும் பாவிகளோ, அவன் கண்ட தரிசனத்தையும், அவனுக்காய் நீட்டப்பட்டிருந்த அன்பின் நேசரின் ஆறுதலளிக்கும் கரங்களையும் காண இயலவில்லை. அச்சிறந்த தரிசனத்தையும், தன்னைத் தன் மார்போடு அணைத்துக்கொள்ள ஆவலோடு காத்து நிற்கிற நேசரையும், தன்னுடைய கண்ணீரைத் துடைக்க அவர் பரிவோடும், பாசத்தோடும் எதிர்நோக்கி நிற்கிறதையும் கண்ட ஸ்தேவானுக்கு தன்மேல் விழுந்த கற்கள் பாரமாயிருக்கவில்லை.

பரம காட்சி பரவசமூட்டியது. திவ்விய காட்சி இதயத்தில் திகழ்ந்தது. உன்னத காட்சி உள்ளத்தை ஊக்குவித்தது. மகிமையின் காட்சி முகத்தை பிரகாசிக்கச் செய்தது. அருகில் நின்றோர்க்கு அதன் இரகசியம் தெரியவில்லை. பார்த்தோர்கொன்றும் புரியவில்லை. கற்கள் மேலே விழ விழ பிரகாசம் கூடிக்கொண்டே போகின்றது. முகமும், தலையும், நெஞ்சும், சரீரமும் நொறுக்கப்படுகின்றது. ஸ்தேவானோ அக்கரைப்படவில்லை, அலறவில்லை, கலங்கவில்லை, ஏங்கவில்லை. என்ன ஆச்சரியம்!

"பெற்றோராலும், சகோதரராலும், பந்து ஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள். உங்களில் சிலரைக் கொலை செய்வார்கள்" லூக். 21:16. "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையையும் செய்வோம்". 2 தீமோ. 2:12.

பாடு சகித்து பரம ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க தன்னை முற்றிலும் தத்தம் செய்த ஸ்தேவான் "உலகத்தின் அலைகளால் விழுங்கப்பட்டுவிட்டான்" எனத் தோன்றினாலும் பரம ராஜ்யத்தில், பரமனின் மடியில் வாழும் பாக்கியத்தை கண்கூடாகக் கண்டவனாகவே அத்தேசத்திற்குள் பிரவேசித்தது எத்தனை மகிமையான சிலாக்கியம்!

அலைகள் மோதும்போது அரண்டு ஓட பிரயாசப்படும் நண்பர்கள், அன்பருக்கு உண்மையாய் வாழமுடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கொடுங்காற்று வீசினாலும், அலைகள் மோதினாலும் "அமிழ்ந்து போவேனோ ஐயரே? கண்பாரும்!" என கதறும் பேதுருவைப்போல் கூவும் வேளை வரும்போதும், தத்தளித்துத் தடுமாறி, திக்கற்று வீழ்ந்து கிடக்கும்போதும், அசையாது உறுதியாய் நிற்பவர்களே விசுவாசிகள். அவர்களுக்குள் மறைந்துகிடந்து, அவர்களை உறுதியாய் நிற்கச்செய்து, அவர்களுக்குச் சத்துவம் கொடுத்து, அவர்களைத் தேவனோடு இசைத்துக் கட்டிவைக்கும் ஓர் "அதிசயக் கயிறே" விசு

வாசமாகும். அக்கயிற்றால் நாம் ஆண்டவரோடு இசையக் கட்டப்பட்டிருப்போமானால் நாம் எந்நிலையிலும் அஞ்சவேண்டியதில்லை. யாருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை. எச்சூழ்நிலையிலும் இதயம் பேதலிக்கவேண்டிய தேவையில்லை.

ஏன்? —

நாம் அவர் கரத்திற்குள் இருக்கிறோம். "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை".

"இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன். உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது".

"இத்தனையாய் - நமக்காய் கவலைப்படும் ஓர் நல்நேசர் நமக்கிருக்க புயலைக் கண்டு நாம் ஏன் அஞ்சவேண்டும்? அலையைக் கண்டு ஏன் சோர்ந்துபோக வேண்டும்?"

இது மட்டுமா? அவரின் அன்பின் வாக்குத்தத்தங்கள் எவ்வளவு அருமையானவைகள்?

"மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலை பெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்".

"சிறுமைப்பட்டவளே........உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களாக்குவேன்".

"உன் பிள்ளைகளெல்லோரும்..........கர்த்தர் சொல்லுகிறார்". ஏசா. 54:10-17.

அலைமோதும் வேளையில் அவர் பிள்ளைகள்மேல் தமது கரத்தை நீட்டி அன்பாய்ப் பாதுகாத்துக் கொள்ளுகின்றார். நமது தேவைகளை அவர் அறிவார். நமக்கு அவசியமானதை அவர் தந்தருளுவார்.

"ஆதலால் அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்". எபி. 2:18.

"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்றகாலத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" எபி 4:15,16.

சோர்ந்து போகாதிருப்போம் – சத்துவம் அவர் தருவார்
தளர்ந்து போகாதிருப்போம் – தயை அவர் காண்பிப்பார்
ஏமாற்றமடையாதிருப்போம் – எல்லா நன்மைகளையும்
ஏற்ற காலத்தில் அவர் தருவார்
சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறது.

ரோமர் 8:28.

நம் வியாதிகள் தேவனுக்குத் தெரியாதது அல்ல. நம் நோய்கள் அவருக்கு மறைவானவை அல்ல. நமக்குச் சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் ரணங்கள் அவருக்குப் புரியாதவை அல்ல அவரால் நம்மைச் சொஸ்தமாக்க முடியும், என்ற விசுவாசமே இன்று தேவை. "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" யாத். 15:26.

எந்த வியாதியாயினும் அவரை விசுவாசத்தோடு நோக்கிப் பார்ப்போம். சிலுவையின் அடியில் நம் வேதனைகளை வைப்போம்.

நம் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும், விசுவாசத்தோடும், ஸ்தோத்திரத்தோடும், அவர் சமுகத்தில் நம் விண்ணப்பங்களை ஏறெடுப்போம். பிலி. 4:6,7.

அவர் எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை தருவார். நம்மை அறிந்தவர், நம்மை சிருஷ்டித்த

வர், நமக்காய் தன் ஜீவனையே பலியாய் ஈந்தவர், நம் பிரச்சினைகளுக்கும் வழிவகுப்பார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அவரை நோக்கியே அல்லும் பகலும் கூப்பிடுவோம். அவர் பாதம் பணிவோம். அவர் கரம் பற்றுவோம்.

இப்புத்தகத்தில் நீங்கள் வாசித்த கருத்துக்களின் மூலமாய் தேவாவியானவர் உங்களோடு பேசி, உங்கள் இருதயங்களுக்குச் சமாதானத்தையும், உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதலையும், உங்கள் வியாதிகளிலிருந்து உங்களுக்கு விடுதலையும் அளித்துள்ளார் எனப் பூரணமாய் நம்புவீர்களானால், அவரால் நிச்சயமாய் எல்லா ஈவுகளையும் அடைந்துகொள்வீர்கள் என்பதற்கு எவ்வித ஐயமுமில்லை.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

தூதன் அச்சகம், நியூபோர்ட் தெரு, நாகர்கோவில்,

"சுவிசேஷ நண்பர் ஐக்கியம்"

இப்பொழுது தன்னுடைய பணியினை விரிவாக்கிக் கொண்டிருக்கிறது.

1. வாரந்தோறும் நூற்றுக்கணக்கானோரைக் "கடிதங்கள்" மூலம் சந்தித்து ஆண்டவருக்கு நேராக இழுக்கிறது.

2. "சுவிசேஷ நண்பன்" பத்திரிகையின் மூலம் ஆயிரக்கணக்கானோரின் இல்லங்களில் அருள் ஒளி வீசி மிளிர்கிறது.

3. "வாலிபர் விருந்து" வானொலிச் செய்திகள் மூலமாய் இயேசுகிறிஸ்துவின் அன்பினை இன்றைய வாலிபர் சமுதாயத்திற்கு சரியான முறையில் அறிவிக்கிறது.

4. இந்து மற்றும் முஸ்லீம் சிறுவர்கள் மத்தியில் வேதாகம வகுப்புகள் ஆரம்பித்து ஆண்டவருக்கு நேராக நடத்துகிறோம்.

5. "அலைகள் மோதினால் அங்கலாய்க்காதே" புத்தகத்தின் வழியாக ஆண்டவர் இயேசுவின் அன்பினை விளக்குகிறது.

6. படக்காட்சி மூலம் கிறிஸ்துவின் வாழ்க்கை, வரலாறுகளை கூறுகிறது.

7. வட இந்திய ஊழியத்திற்காக நான்கு ஊழியரை அனுப்பியுள்ளது. இது ஆரம்பம்.

8. மலைகளுக்குள் இருக்கும் மக்களைத் தேடிச் சென்று தேவ அன்பினைக் கூறுகிறது.

9. தியானக் கூட்டங்கள், முகாம்கள் மூலமாய் தேவனை மகிமைப்படுத்துகிறது.

10. கைப்பிரதிகளை வினியோகிப்பதின் மூலம் ஏராளமானோரை சந்திக்கிறது.

இப்பணிகளுக்காக ஜெபியுங்கள்.

— மேல் விபரங்கட்கு —
சுவிசேஷ நண்பர் ஐக்கியம்
தபால் பெட்டி – 68
நாகர்கோவில் – 629001

அன்பரின் அறுவடைப் பணியும் —

சுவிசேஷ நண்பர் ஐக்கியம்



— அதன் வளர்ச்சியும்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

சுவிசேஷ நண்பர் ஐக்கியம் நம் நாட்டின் பல பகுதிகளில் செய்துவரும் ஊழியம். உங்களைப் போன்ற விசுவாசிகளின் கண்ணீர்சிந்தும் ஜெபத்தினாலும், திறந்த உள்ளமுடன் படைக்கும் பொருளுதவிகளாலும் இம்மட்டும் நல்முறையில் இயங்கி வருகிறது.

இவ்வூழியம் முழுக்க முழுக்க விசுவாசத்தின் அடிப்படையில் நடைபெறுவதாகும். எல்லா தேவைகளுக்கும் ஒத்தாசை செய்யும் கிறிஸ்துவின் கரங்களையே எதிர்பார்க்கிறோம்.

இந்நாட்களில் இவ்வூழியத்தில் பாரங்கொண்ட அநேகரைக் கர்த்தர் எழுப்பவேண்டுமென்பதே எங்கள் ஜெபமாகும்.

நம் தேசம் இயேசுவை அறியும் அறிவில் வளர வேண்டுமானால் நம் பொறுப்பினை உணர்ந்து செயல்படவேண்டும்.

இவ்வூழியத்தில் உங்கள் பங்கு :-

இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியான ஆண் பெண் இருபாலருக்கும் இவ்வூழியத்தில் பங்கு உண்டு.

உங்கள் முழங்கால், உங்கள் உதவி, ஒத்தாசை யாவும் இவ்வூழியத்திற்குத் தேவை.

நம் தேசம் தேவனை அறிய, இயேசுவின் நாமம் நம் நாட்டில் ஒலிக்க, இறைபணி வளர, இன்ப இயேசுவை இந்தியாவில் அறிமுகம்செய்ய இணைந்து செயல்படுவோம்

வாரீர்! வாரீர்!!

தொடர்பு முகவரி :

சுவிசேஷ நண்பர் ஐக்கியம்

த. பெ. 68, நாகர்கோவில் - 1.

வானொலியில் கேளுங்கள்

தேவ சமாதானம்

புதன் காலை 7.15 மணி

Copies can be had from:

Fellowship of Evangelical Friends
23, Isaac St., NAGERCOIL.

Living Literature Book-Stall
58, College Road,
Nagercoil - 629 001.